[2004 ஜூலை 31

மருத்துவத் துறையிலிருந்து செய்தி மற்றும் சுற்றுலாத் துறைக்கு தற்போதுதான் மாற்றப்பட்டுள்ளது. சமாதி அமைந்துள்ள இடத்தை மேம்படுத்தும் வகையிலே ரூபாய் 2 இலட்சம் நிதியை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு ஒதுக்கீடு செய்து, இந்த நிதியைக் கொண்டு சமாதி அமைந்துள்ள இடத்தில் சுற்று மதில்சுவர் எழுப்பி, நுழைவு வாயில், ஆர்ச் மற்றும் கேட் அமைத்தல், மின் விளக்கு வசதி அமைத்தல் உள்ளிட்ட பணிகளை பொதுப் பணித் துறையின் மூலமாக மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப் பெற்ற உடுக்குறியிட்ட வினாக்கள் அமைச்சர்கள் விடைகளுடன் (பட்டியல்கள் 13, 14, 15, 16, 17 மற்றும் 18— இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது)@

(இ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 19— இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது)@@

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

தருமபுரி மாவட்டம், கெலமங்கலம் மற்றும் தளி ஒன்றியங்களின் வனப் பகுதியிலுள்ள ஊர்களில் கால்நடை மருந்தகங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு, திரு. கே.வி. முரளிதரன் அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. முரளிதரன்.

@ 225 முதல் 952 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆகச் சேர்க்கப்பட்டுள்ளது.

@@ 953 முதல் 1024 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆகச் சேர்க்கப்பட்டுள்ளது.

2004 ஜூலை 31]

***திரு. கே.வி. முரளிதரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தருமபுரி மாவட்டம், கெலமங்கலம் மற்றும் தளி ஊராட்சி ஒன்றியங்களின் வனப் பகுதியில் உள்ள தொட்டபேளூர், கும்ளாபுரம் போன்ற ஊர்களில் கால்நடை மருந்தகங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

தருமபுரி மாவட்டம், ஒசூர் கோட்டம், கெலமங்கலம் மற்றும் தளி ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட தொட்டபேளூர், மேல்பேவநத்தம் மற்றும் கும்ளாபுரம், மாடக்கல், உரிகம், கோட்டையூர், நாட்றாம்பாளையம், மஞ்சுகொண்டபள்ளி, பேளாவனம் கிராமங்களுக்கு அருகில் கீழ்க்கண்ட கால்நடை மருந்தகங்கள் மற்றும் கால்நடை கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன:

I. கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம்

வ. எண்.	கால்நடை மருந்தகம்	வ. எண்.	கால்நடை கிளை நிலையம்
1.	கெலமங்கலம்	1.	உள்ளுகுறிகை
2.	தேன்கனிக்கோட்டை	2.	குண்டுமாரணப்பள்ளி
3.	இராயக்கோட்டை	3.	சந்தானப்பள்ளி
		4.	கண்டகானபள்ளி
		5.	லிங்கனம்பட்டி
		6.	கும்மனூர்

[திரு. ப.வெ. தாமோதிரன்] [2004 ஜூலை 31

II. தளி ஊராட்சி ஒன்றியம்

வ. எண்.	கால்நடை மருந்தகம்	வ. எண்.	கால்நடை கிளை நிலையம்
1.	தளி	1.	பாளையம்கோட்டா
2.	அஞ்செட்டி	2.	ஜாவலகிரி
3.	மடகொண்டபட்டி	3.	காக்கதசம்
4.	பெத்தபெலகொண்டபள்ளி	4.	ஆண்டேவனப்பள்ளி
		5.	பென்னாகூர்
		6.	தேவகானப்பள்ளி

தற்போது இத்துறையில் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்களை மட்டுமே கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், 2004–2005–ல் கெலமங்கலம் மற்றும் தளி ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படும் கிளை நிலையங்களில் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கிளை நிலையம் வீதம் கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்துவதற்கு அரசு பரிசீலனை செய்யும். மேலும், கால்நடை மருத்துவ நிலையங்கள் இல்லாத கிராமங்களில் கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் முகாம்கள் அமைத்து மருத்துவ வசதி செய்து தரும்படி மண்டல இணை இயக்குநருக்கு அறிவுரை வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.வி. முரளிதரன்.

திரு. கே.வி. முரளிதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையை நன்றாகப் படித்துப் பார்த்தேன். 2004–2005–ல் கெலமங்கலம் மற்றும் தளி ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படும் கிளை நிலையங்களில், ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப் பரிசீலிக்கப்படும் என்பதைச் சொல்லியிருக்கிறீர்கள். அரசுக்கு நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் கால்நடை மருத்துவ நிலையங்கள் இல்லாத கிராமங்களுக்கு, கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் முகாம்கள் அமைத்து, மருத்துவ வசதி செய்து தரும்படி மண்டல இணை இயக்குநருக்கு அறிவுரை வழங்கப்படுமென்று கூறியிருக்கிறீர்கள். ஆனால், ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் 25 கி.மீ. தூரம் இருக்கிற

2004 ஜூலை 31] [திரு. கே.வி. முரளிதரன்]

காரணத்தினால், கால்நடைகளை அந்த மருத்துவமனைக்குக் கொண்டு வரவேண்டுமென்றால், 25 கி.மீ. 30 கி.மீ. கொண்டு வர வேண்டும். அதற்கு, மேல் பேவநத்தம், தொட்டபேளூர், கும்ளாபுரம், மாடக்கல், உரிகம், கோட்டையூர், தக்கட்டி, நாட்றாம்பாளையம், மஞ்சுகொண்டபள்ளி ஆகிய ஊர்களில் கால்நடை கிளை நிலையங்கள் இந்த ஆண்டு அமைத்துத்தர கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் முன்வருவாரா எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் கால்நடை கிளை நிலையங்கள் அமைக்க மாநில திட்டக் குழு விதித்துள்ள தடை இன்னும் அமலில் உள்ளது. ஆகவே, அங்கே புதிய கால்நடை கிளை நிலையங்கள் தற்போது துவக்க வாய்ப்பு இல்லை. இருந்தாலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணை பெற்று, தகுதிக்கேற்ப, கால்நடை கிளை நிலையங்கள் ஏற்படுத்துவது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. கே.என். இலட்சுமணன் அவர்கள்.

திரு. கே.என். இலட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். 2003–2004 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 221 முதல் 246 வரையிலான 26 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள். முனைவர் மு. தம்பிதுரை.

டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2004 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 153 முதல் 158 வரையிலான 6 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.